**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08032024-7105

Volume: 8

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.10.2023

Accepted: 19.12.2023

Published: 01.01.2024

Citation:
Ponmalar, C. "Leather Usage by the Ancient Tamils." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 3, 2024, pp. 29–32.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i3.7105

*Corresponding Author:
ponmalarmuthuraj@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Leather Usage by the Ancient Tamils

**C. Ponmalar**

*Assistant Professor, Vivekananda College, Agasteeswaram, Tamil Nadu, India*

*https://orcid.org/0009-0001-2259-9363*

**Abstract**

The usage of leather products has been prevalent since time immemorial. Leather and the science related to it have immensely contributed to the social and economic development of the Tamil community. The research article focuses on providing adequate information about the leather products, names given to leather, handicrafts, technology used in producing leather products by Tamil people and other relevant information related to leather products.

**Key Words:** Sangha Literature, Leather Tools, Ancient Tamil, Leather, Use of Leather.

**References**

1. Jeyapaul, R. *Agananooru*, Chennai, New Centuri Book House, 2004.
2. Narayana Velupillai, M. *Paripadal*, Narpavi Prasuram, Chennai. 2008.
3. Parathuvasi Nachinarkiniyar. *Kalithogai*, Mullainilaiyam, Chennai, 2008.
4. Puliyoor Kesigan. Purananooru, Paari Nilaiyam, Chennai, 2011.

# பழந்தமிழர் பண்பாட்டில் தோல் பயன்பாடு

***முனைவர் செ. பொன்மலர்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்

***ஆய்வுச் சுருக்கம்***
*தோல் பொருட்களின் பயன்பாடு வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் தற்காலம் வரை இருந்து வருகிறது. தோல் மற்றும் தோல் சார்ந்த அறிவியல் தமிழ் மக்களின் சமூக முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளது. இக்கட்டுரையில் தோல், தோலுக்கு வழங்கப்படும் பெயர்கள், கைவினைப்பொருட்கள், தோல் தொழிலில் பயன்படுத்திய தொழில் நுட்பம், தோல் சார்ந்த தமிழ் சமூகத்தின் பயன்பாடு மற்றும் தரவுகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.*

***முக்கியச்சொற்கள்:*** *சங்க இலக்கியம், பண்டைத் தமிழர், தோல், தோல் கருவிகள், தோல் பயன்பாடு, திறனாய்வு*

பண்டைக் காலத்தில் விலங்கினங்களின் தசைகளைப் பச்சையாக உண்ட மனிதன் பின்னர் தீயினால் சுட்டு உண்ண ஆரம்பித்தான். தோலின் மாமிசங்களை நீக்கித் தோலினை உலர வைத்துப் பயன்படுத்தியதன் தொடக்கமே நாகரிகத்தின் துவக்கமாக இருந்துள்ளது. மரப்பொந்துகளிலும், மலைக்குகைகளிலும் தங்கி குளிரில் நடுங்கிய மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள தோலைத் தன் உடலில் போர்த்திக் கொண்டான். நாளடைவில் மக்கள் ஆடையாகவும், நீரைச் சேகரிக்கவும் பல விதமான பயன்பாட்டுப் பொருள்களாகவும் பயன்படுத்தினர். சங்க கால மக்களின் தோல் தொழில்கள் பற்றியும், அத்தொழிலில் பயன்படுத்திய நுட்பங்கள் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## தோல் தொழில்

பழந்தமிழர்கள் இறந்த விலங்குகளின் தோலின் பயனறிந்து அதனைப் பதப்படுத்தி வாழ்க்கைத் தேவைக்கான பயன்படு பொருளாக மாற்றிப் பயன்படுத்தி உள்ளனர். சங்கப் புலவர்கள் பல இடங்களில் தோலை உவமையாகக் கூறியுள்ளனர். அவர்கள் தோலுக்குப் பல்வேறு பெயர்களை வழங்கியுள்ளனர். அவை; பச்சை, உரிளை, உரி, சருமம்.

**"மின்னேர் பச்சை"** *(புறம், 308)*
**"தைப்பகை சருமத்தில்"** *(பரி. 213)*
**"நல்லேற்று உரிளை"** *(அகம். 334)*

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வீரத்தினையும், காதலையும் எடுத்தியம்புகின்றன. தோல் பெரும்பாலும் வீரத்தோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. ஏனெனில் படைகளில் உள்ள கவசம், உறை போன்ற பலவும் தோலினால் செய்யப்பட்டவையாகும்

சங்க கால மக்கள் போர்த்தொழிலுக்குரிய கருவிகளை உறுதியாகவும் நுட்பமாகவும் உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளனர். கேடகம், கைஉறை, கவசம், வாள், உறை முதலானவை முக்கியமானவையாகும்.

## கேடகம்

போர்த் தொழிலுக்குச் செல்லும் படைவீரர்கள் பகைவர்களின் தாக்குதலில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ளப்

பயன்படுத்தும் கருவி "கேடகம்" ஆகும். இது கேடயம், கிடுகு, பலகை, பரிசை, தோல் போன்ற பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கேடகம் பெருமளவு தோலால் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டதால் அதனைத் தோல் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதனை,

**"ஈண்டிய மழையென மருளும் பஃறோல்"**

***(புறம், 17:34)***

என்றப் பாடலடிமூலம் அறியலாம்.

### கை உறை

போருக்குச் செல்லும் வீரர்கள், தேர் ஓட்டுபவர்கள் பல்வேறுவிதமான ஆயுதங்களை ஏந்திச்செல்ல இவ்வாயுதங்கள், கை வியர்வையினால் நெகிழாமல் இருப்பதற்குக் கைச்சரடு பகையுறை அணிவர். இவ்வுறையானது உடும்பின் தோலால் செய்யப்பட்டிருந்ததை

**"உடும்பு செய் பாணி நெடுந்தேர் வலவா"**

***(புறம். 333)***

என்றப் பாடலடிமூலம் அறியலாம். இதிலிருந்து தற்போது விளையாட்டு வீரர்கள் பயன்படுத்துவது போன்று பழந்தமிழர்களும் கையுறை அணிந்துள்ளமை புலனாகிறது.

### கவசம்

வீரர்கள் போரில் ஈடுபடும்போது பகைவரின் வாள், வேல் ஆகியவற்றிலிருந்து தங்கள் உடலைப் பாதுகாத்துக்கொள்ள கவசம் அணிந்திருந்தனர். அது இரும்பு அல்லது புலித்தோலால் செய்யப்பட்டிருந்தது. இப்பாதுகாப்புக் கவசத்தை "மெய்புதை அரணம்" என்றும் கூறுவர்.

**"புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழிய மார்பின"**

***(புறம், 13: 2-3)***

இதில் புலிநிறக் கவசம் என்பது புலித்தோலால் செய்யப்பட்ட மெய்புகு கருவி அல்லது கவசத்தைக் குறித்தது. இது புலித்தோலில் காணப்படும் வரியுடன் இணைப்பும் கலந்து அழகுடன் காணப்பட்டிருப்பதால் பூம்பொறி என்றனர். இதனைப் "புலிப்பொறிப் போர்வை" என்று கூறுவதும் உண்டு.

### வாள் உறை

போருக்குச் செல்லும் வீரர்கள் வில், அம்பு, ஈட்டி, வாள் போன்றவற்றைப் பாதுகாப்பாக எடுத்துச் சொல்ல தோலால் செய்த உறையினைப் பயன்படுத்தினர். இது பெரும்பாலும் புலித் தோலால் செய்யப்பட்டிருந்தது. இதனை,

**"தோல் செறிப்பினின் வேல் கண்டவர்"**

***(புறம், 96 :10)***

என்றப் பாடலடிகள் மூலம் அறியலாம்.

### இசைக் கருவிகள்

தவுல், பம்பை, உறுமி, பறை போன்ற இசைக் கருவிகள் தற்போது தோலைப் பயன்படுத்திச் செய்யப்படுவதைப் போன்று முற்காலத்திலும் தோலைப் பயன்படுத்தி இசைக் கருவிகளைத் தயார் செய்துள்ளனர். அக்காலத்தில் இசைக் கருவிகளில் முரசு, பதலை, ஆகுளி, சிறுமுழக் கிணைப்பறை, தடாரி, துடி, தண்ணுமை போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

போர்க் காலத்தில் முரசு என்னும் இசைக் கருவியினை இசைத்துள்ளனர். இது போர் வீரர்களை வழிநடத்திச் செல்ல மிகவும் பயன்பட்டுள்ளது. இதனை வன்மையான மயிர் நீக்கப்படாத தோல்களால் செய்யப்பட்டு தோல் வார்களால் இழுத்துக் கட்டப்பட்டதை,

**"வசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்"**

***(புறம், 63:7)***

என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

### பைகள்

பழங்கால மக்கள் தோலினால் பல்வேறு விதமானப் பொருட்களைச் செய்துள்ளனர். அதில் தோல்பைகள் குறிப்பிடத்தக்கவையாகும். பைகள் பொருட்களைப் பாதுகாப்பாக எடுத்து செல்லப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது பயன்படுத்தப்படும் துணிப்பை, நூல்பை, போன்ற முற்காலத்தில் தோல்பைகளைப் பயன்படுத்தி உள்ளனர். முல்லை நில மக்கள் கமுவோடே சுட்டுக் கோலையும் தோற்பையிலிட்டுச் சுருக்கிக் கட்டிச் செல்வதை,

**“கமுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்”**

***(கலி, 106:1)***

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

**மிதியடிகள் (காலணி)**

சங்ககால மக்கள் தோலினால் ஆன மிதியடிகளைப் பயன்படுத்தி உள்ளனர். அவர்கள் காலணியினை அடையல் (செருப்புடை அடியர். அகம், 129:12) அடிபுதை அரணம் (அடிபுதை அரணம் எய்தி. (பெரும், 69) போன்ற சொற்களால் குறிப்பிடுகின்றனர். காலணி தைப்பதை,

**“தைப்பமை சருமத்தில் தாளியை தாமரை
துப்பமை துவர்நீர்த் துறைமறை அழுத்திய
வெரிநத் தோலொடு முழுமயிர் மிடைந்த
வரிமலி யரவுரி வள்புகண் டன்ன
புரிமென் பீலிப் போழ்புனை அடையல்”**

***(பரி, 21:2-7)***

என்ற பாடல்மூலம் அறியமுடிகிறது. இதில் தோலின் மேற்பகுதியினைத் தாமரை மலரின் செந்நிறைத்தைக் கொண்ட துவர் நீர்த்துறையில் முழுவதும் நனையும்படி அழுத்திப் பதப்படுத்துவர். முழுவதும் மயிர் செறிந்திருக்கும் முதுகு பக்கத் தோலிடத்தே, வரிகள் பாம்பினது தோலைக் கீறிச் செய்த வாரைப்போல விளங்கும். மயிற் பீலிகளின் அழகிய மென்மையான பிளவுகளாலே அழகுப்படுத்துவர். இவ்வாறு செய்தமையால் அடையல் என்றும் செருப்பு என்று வழங்கப்பட்டது.

**ஊதுலைக் கருவி**

கொல்லன் பட்டறையில் ஊதுலையாகப் பயன்படுத்தும் துருத்தி தோலினால் செய்யப்பட்டதாகும். இது மெல்லிய தோலால் செய்யப்பட்டுள்ளது. இதனை,

**“ஊதுலை விசைவாங்கு தோலின் வீங்குபு”**

***(அகம், 96)***

என்றப் பாடலடி மூலம் அறியலாம்.

**தோளணி**

பெண்கள் தற்போது தோளணிகளை மிகவும் விரும்பிப் பயன்படுத்துகின்றனர். அதேபோன்று சங்க கால பெண்கள் தோலை வட்டவடிவமாக வெட்டி அதனைச் சுற்றிலும் முத்தாலும், மணியாலும் அலங்கரித்து அதனைத் தோளணியாகப் பயன்படுத்தியதை,

**“புள்ளி யிரலைத் தோல் ஊன் உதிர்த்துக்
தீதுகளைத் தெஞ்சிய திகழ்விடு பாண்டில்
பருதி போகிய புடைகிளை சுட்டி
நலம் பெறு திருமணி கூட்டு நற்றோள்”**

***(பதிற்று. 74: 10-16)***

என்ற பதிற்றுப்பத்துப் பாடல் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

தோலின் பயன்பாடு உலக அளவில் மனித இன வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது. அது மட்டுமல்லாமல் மனித நாகரிக வளர்ச்சியின் ஆணிவேராகவும் பண்பாட்டுத் தரவுகளாகவும் இருந்துள்ளது. தோலின் மூலம் பல்வேறுப் பொருட்களைச் செய்து பயன்படுத்தியுள்ள பாங்கு சங்கத் தமிழரின் அறிவு நுட்பத்திற்குச் சான்றாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. செயபால், இரா. *அகநானூறு*, சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
2. நாராயண வேலுப்பிள்ளை. எம் பரிபாடல், நற்பவி பிரசுரம், சென்னை. 2008.
3. நச்சினார்க்கினியர். *கலித்தொகை*, சென்னை, முல்லை நிலையம், 2008.
4. புலியூர்க்கேசிகன், புறநானூறு, *பாரிநிலையம்*, பிராட்வே, சென்னை, 2011.